2009 ஜூலை 21]

## (அஆ) திருநெல்வேலி மாவட்டம், கடற்கரையோர கிராமங்களில் தூண்டில் வளைவுகள் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சுனாமி ஏற்பட்ட பின்பு, திருநெல்வேலி மாவட்ட கடற்கரை கிராமங்களான கூட்டப்புளி, பெருமணல், தோமையார்புரம், கூத்தன்குழி, உவரி, கூட்டப்பனை, கொடுதாழை ஆகிய பகுதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, உவரி கடற்கரை அதிகமாக பாதிக்கப்பட்டு நூற்றுக்கணக்கான வீடுகள் பாதிப்படைந்துவிட்டன. பொதுப் பணித் துறைமூலம் இந்தக் கடற்கரைக் கிராமங்களில் தூண்டில் வளைவு கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்குச் சென்றிருக்கிறது. ஆனால் இதுவரை நிதி ஒதுக்கப்படவில்லை. ஆகவே, நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்ற உவரி உள்ளடக்கிய அனைத்து கடற்கரையோர கிராமங்களுக்கும் தூண்டில் வளைவு கட்டித் தர அரசு இந்த ஆண்டே முயற்சி செய்யுமா என்று கேட்டு மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய மேலான கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

## (அஇ) அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தியாவசிய பொருள்களுடைய விலைகள் திடீரென்று இந்த ஒரு மாத காலத்தில் ஏறியதன் விளைவாக, துவரம் பருப்பு கிலோ 65 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரையிலும் விற்பதைப் பார்க்கின்றபோது ஒரு குடும்பத்திற்கு மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் செலவு கூடுதலாக ஆகின்ற நிலை உருவாகி இருக்கின்றது. அனைத்துப் பொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. அதே நேரத்தில், அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிற சில ஹோட்டல்களில் 20 ரூபாய்க்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்பிரச்சினை குறித்த அறிவிப்புகளைப் பின்னர் எடுக்கப் போகிறேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** எடுத்தால் சரி.